# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 207 | 4 Pages | 28.2.2024 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 207 | 4 பக்கங்கள் | 28.2.2024 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## பாகிஸ்தான் வரலாற்றில் முதல் பெண் முதலமைச்சர்: யார் இந்த மரியம் நவாஸ்?



பாகிஸ்தான், பிப்.28

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ், பஞ்சாப் மாகாணத்தின் முதலமைச்சராக பதவியேற்றார். இதன்மூலம் பாகிஸ்தான் வரலாற்றில் முதல் பெண் முதலமைச்சர் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றம் மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட 5 மாகாண சட்டசபைகளுக்கும் பொதுத் தேர்தல் கடந்த 8ம் தேதி நடந்தது. இதில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு நடந்த தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்றது. பாகிஸ்தான் மக்கள் கட்சி மற்றும் சுயேட்சைகள் மரியம் நவாஸ் ஷெரீபுக்கு ஆதரவு தந்தனர்.

மூன்று முறை பிரதமராக பதவி வகித்த நவாஸ் ஷெரீப்பின் மகள் மரியம் நவாஸ் பஞ்சாப் மாகாணத்தின் முதல் பெண் முதலமைச்சராக தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், கூட்டணிக் கட்சிகளான பாகிஸ்தான் மக்கள் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கியூ மற்றும் இஸ்டேகாம்ஐபாகிஸ்தான் கட்சி ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ளார் மரியம் நவாஸ்.

50 வயதான மரியம் நவாஸ் தனது தந்தையும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள தனது சித்தப்பா ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரது முன்னிலையில், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் பஞ்சாப் முதல்வராகப் பதிவியேற்றார். இதைத் தொடர்ந்து உரையாற்றிய மரியம் நவாஸ், தனது தந்தை அலங்கரித்த பதவியில் தான் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

பஞ்சாப் மாகாணத்தின் ஒவ்வொரு பெண்ணும், பெண் முதல்வரைப் பார்த்து பெருமிதம் கொள்வதாகவும், இதே போல, பெண்கள் தலைமைப் பதவியேற்கும் சூழல் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கை வந்துள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார். எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

# இல்லம் தோறும் ஸ்டாலின் குரல்: திண்ணைப் பிரசாரத்தை தொடங்கியது தி.மு.க.



சென்னை, பிப்.28

பாராளுமன்ற தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரியில் உள்ள 40 தொகுதிகளிலும் வெற்றி பெறுவதற்கு தி.மு.க. திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

இதற்காக கடந்த 6 மாதங்களுக்கு முன்பே தொகுதி வாரியாக பணியை தி.மு.க. தொடங்கி விட்டது.

முகவர்கள் கூட்டம், பி.எல்.ஏ. 2 நிர்வாகிகளுடன் ஆலோசனை என அடுத்தடுத்து கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதன் பிறகு ஒவ்வொரு அணிகளின் சார்பில் தேர்தல் ஆலோசனை கூட்டங்கள் நடத்தப்பட்டு வந்தது.

தெருமுனை கூட்டங்கள், பொதுக் கூட்டங்கள் என அடுத்தடுத்து பிரசார கூட்டங்கள் நடைபெற்று வந்தது.

இந்த நிலையில் தமிழகத்தை வஞ்சிக்கும் மத்திய அரசை கண்டித்தும், பிரதமர் மோடி அரசின் செயல்பாடுகளை விமர்சித்தும் உரிமைகளை மீட்க ஸ்டாலின் குரல் என்ற தலைப்பில் பாராளுமன்ற தொகுதி வாரியாக அனைத்து ஊர்களிலும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

அனைத்து தொகுதிகளிலும் ஒரே மாதிரியாக மேடை அமைக்கப்பட்டு எல்.ஈ.டி. திரைகளுடன் பிரமாண்ட கூட்டங்களாக நடத்தி முடிக்கப்பட்டது. இந்த கூட்டம் மாநிலம் முழுவதும் உள்ள தி.மு.க. வினரை உற்சாகப்படுத்தியது.

இதை தொடர்ந்து கடந்த வாரம் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை காணொலியில் நடத்திய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் வீடு வீடாக சென்று தி.மு.க. சார்பில் தேர்தல் பிரசாரம் நடத்த வேண்டும் என்று கட்டளையிட்டார்.

திராவிட மாடல் ஆட்சியின் 3ம் ஆண்டு சாதனைகளையும், தமிழ்நாடு அரசின் பட்ஜெட் அறிக்கையின் சிறப்பம்சங்களையும் வீடு தோறும் கொண்டு சேர்க்கவும், தமிழ்நாட்டுக்கும் தமிழுக்கும், தமிழர்களுக்கும் பாரதிய ஜனதா அரசு செய்து வரும் அநீதிகளை ஒவ்வொருவருக்கும் எடுத்துரைக்கும் வகையில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் என்ற தலைப்பில் திண்ணைப் பிரசாரத்தை தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தி இருந்தார்.

அதன்படி தமிழ்நாடு முழுவதும் இன்று தி.மு.க. வின் திண்ணைப் பிரசாரம் தொடங்கப்பட்டது.

சென்னையை அடுத்த கோவூரில் நடைபெற்ற திண்ணைப் பிரசாரத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு வீடு வீடாக துண்டு பிரசுரம் வழங்கி பிரசாரம் செய்தார்.

வருகிற பாராளுமன்ற தேர்தலில் தி.மு.க.வை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும் என்றும், தமிழகத்திற்கு உரிய நிதி தராமல் வஞ்சிக்கும் பாரதிய ஜனதா கட்சிக்கு பாடம் புகட்டுங்கள் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அவருடன் ஒன்றிய செயலாளர்கள் படப்பை மனோகரன், வந்தே மாதரம் உள்பட கழக நிர்வாகிகள் உடன் சென்று பிரசாரத்தில் பங்கேற்றனர்.

இதே போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் தி.மு.க.வின் திண்ணைப் பிரசாரங்கள் தொடங்கியது. அந்தந்த மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் பிரசாரங்கள் நடைபெற்று வருகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல் ஒலிக்க 6 சட்டமன்ற தொகுதியில் அடங்கிய 2,378 வாக்குச் சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் வாக்குச் சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அனைவரும் இணைந்து நாளை மறுநாள் (28ந்தேதி) ஒருநாள் முழுவதும் வீடு வீடாக சென்று துண்டு பிரசுரங்களை வழங்கி திண்ணைப் பிரசாரம் செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.




# அ.தி.மு.க.வினர் சார்பில் ஜெயலலிதா பிறந்த நாள் விழா

திருப்பூர், பிப்.28

அதிமுக திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டத்தின் சார்பில் உடுமலை சட்டமன்ற தொகுதியில்உடுமலை நகராட்சி குடிமங்கலம் ஒன்றியம்வடக்கு,கிழக்கு,மேற்கு பொள்ளாச்சி ஒன்றியம் தெற்கு மேற்கு, கிழக்கு, வடக்கு பகுதியில் ஜெயலலிதா 76 வது பிறந்த நாளை முன்னிட்டு கழகக் கொடியேற்றி 20 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு அண்ணாமாபெரும் அன்னதானமும், 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு இனிப்புகளும் வழங்கி துவக்கி வைத்தார்.



முன்னாள் அமைச்சர் கழக அமைப்புச் செயலாளர்திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் உடுமலை சட்டமன்ற உறுப்பினர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் பி.காம் MLA நிகழ்ச்சி சிறப்பித்தவர்கள் மாவட்ட ஒன்றிய நகர பேரூராட்சி ஊராட்சி கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் அண்ணா போக்குவரத்து தொழில்சங்கம் ஊராட்சித் தலைவர்கள் ஒன்றிய குழு உறுப்பினர்கள்வார்டு உறுப்பினர்கள் அண்ணா ஆட்டோ தொழில்சங்கம் அதிமுக பாரம் தூக்கம் தொழிற்சங்கம் (ம) உயிரில் கலந்த கழக உடன்பிறப்புகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்

# அ.தி.மு.க.வினர் சார்பில் ஜெயலலிதா பிறந்த நாள் விழா

திருப்பூர், பிப்.28

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் புரட்சித்தலைவி அம்மா 76 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு இடுவாய் ஊராட்சியின் கிளைக் கழக கொடி ஏற்றும் விழா மற்றும் அன்னதானம் துவக்கி வைப்பதற்காக முன்னால் அமைச்சர் பல்லடம் சடட மன்ற உறுப்பினர் M.S.M.ஆனந்தன் அவர்களும் முன்னால் சட்டமன்ற உறுப்பினர் பல்லடம் வடக்கு ஒன்றிய செயலாளர் அண்ணன் கரைபுதூர் A.நடராஜன் கலந்து கொண்டு விழாவை சிறப்பாக நாட்டத்தி கொடுத்தனர்.



உடன் C.T.C. பழனியப்பன் இடுவாய் ஊராட்சி மன்ற துணை தலைவர் பரமசிவம் மற்றும் அதிமுகவை சார்ந்த லோகநாதன் சிவகுமார் காளிமுத்து மூர்த்தி ஜே ஜே மணி ஜனார்த்தனன் ஆறுமுகம் செல்வராஜ் மற்றும் கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக நிறுவாகிகள் ஊர பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# பண்ருட்டி அருகே தாய் மர்ம சாவு மகனிடம் போலீசார் தீவிர விசாரணை

பண்ருட்டி பிப் 28

கடலூர் மாவட்டம் பண்ருட்டி அருகே அருங்குணம் கிராமத்தைச் சேர்ந்தவர் வேலு மனைவி முத்துலட்சுமி 52. மகன் மணிவாசகம் இவர்கள் மூவரும் குடும்பத்துடன் வசித்து வரும் நிலையில் நேற்று காலை வேலு வழக்கம்போல் விவசாய நிலத்துக்கு சென்றுள்ளார்.

மீண்டும் வீட்டிற்கு வந்து பார்த்தபோது மனைவி முத்துலட்சுமி மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இதனை கண்ட அதிர்ச்சி அடைந்தஅவர்இது குறித்து அக்கம் பக்கத்து விட்டாரிடம் தகவல் தெரிவித்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த புதுப்பேட்டை போலீசார் இன்ஸ்பெக்டர் பலராமன் (பொறுப்பு) பிரேதத்தை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். பின்னர் மேலும், விபத்தா அல்லது கொலையா என்று அவரதுமகன்மணிவாசகத்திடம் போலீசார் தீவிர விசாரணை செய்து வருகின்றனர்.

# மேல்மலையனூர் ஒன்றியத்தில் உயர்மட்ட பாலமாக அமைப்பதற்கான பூமி பூஜை

விழுப்புரம், பிப்.28

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வடபாலை தென்பாலை சாலையில் உள்ள தரைபாலத்தை நபார்டு மற்றும் கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் ரூ.5.93 கோடி மதிப்பீட்டில் புதியதாக உயர்மட்ட பாலமாக அமைப்பதற்கு நடைபெற்ற பூமி பூஜை நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.



உடன் செஞ்சி ஒன்றிய சேர்மன் விஜயகுமார், மேல்மலையனூர் ஒன்றியதுணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஒன்றிய ஒன்றிய கழக செயலாளர் நாராயண மூர்த்தி, ஒன்றிய கவுன்சிலர் காசி அம்மாள் கோதண்டம், ஊராட்சி மன்ற தலைவர் சங்கீதா சீனிவாசன். மற்றும் கழக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# சாலையில் மரம் விழுந்து தமிழகம் – கர்நாடக இடையே போக்குவரத்து துண்டிப்பு



தாளவாடி, பிப்.28

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வழியாக ஆசனூரில் இருந்து கர்நாடகா மாநிலம் கொள்ளேகால் செல்லும் சாலை அமைந்துள்ளது.

இந்நிலையில் இன்று காலை மாவள்ளம் பிரிவு அருகே சாலை ஓரத்தில் இருந்த தைய மரம் சாலையில் முறிந்து விழுந்தது. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. மேலும் வாகனங்கள் இருபுறமும் அணிவகுத்து நின்றன.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற ஆசனூர் தீயணைப்புத் துறையினர் மற்றும் வனத்துறையினர் 2 மணி நேரத்திற்கு பிறகு மரத்தை வெட்டி அப்புறப்படுத்தினர். பின்னர் போக்குவரத்து சீரானது. இதனால் தமிழக கர்நாடக இடையே 2 மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

# கன்னிவாடி பேரூராட்சியில் உள்ளாட்சித் திட்ட பணிகள் அமைச்சர் ஐ பெரியசாமி துவக்கி வைத்தார்

திண்டுக்கல் பிப் 28

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி பேரூராட்சிக்கு உட்பட்ட மணியக்காரன் பட்டியில் நகர் கப்புற உள்ளாட்சி வேலைவாய்ப்பு திட்டப் பணிகளை ஊறக வளர்ச்சித்துறைஅமைச்சர் ஐ பெரியசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.y அருகில் திண்டுக்கல் மாவட்டஆட்சித்தலைவர் மோ.பூங்கொடி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் திருவேலுச்சாமி மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் மற்றும் கன்னிவாடி பேரூராட்சி தலைவர் துணைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# பல்லடத்தில் பிரதமர் மோடி பா.ஜ.க.வினர் உற்சாக வரவேற்பு

பல்லடம், பிப்.28

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலையின் 'என் மண், என் மக்கள்' யாத்திரை நிறைவு விழாவின் கூட்டத்தில் பங்கேற்று பிரதமர் மோடி சிறப்புரையாற்றுகிறார்.

இதற்காக அவர் கேரளாவில் இருந்து விமானம் மூலம் கோவை சூலூர் விமானப்படை தளத்திற்கு வந்தார். பின்னர் சூலூரில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் மாதப்பூருக்கு பிரதமர் மோடி வந்தடைந்தார். இதன்பின் கூட்டத்தில் பங்கேற்பதற்காக திறந்த ஜீப்பில் பயணித்த பிரதமர் மோடி தொண்டர்கள், நிர்வாகிகள், பொதுமக்களை பார்த்து கையசைத்தபடி வந்தார்.



அவருடன் பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை மற்றும் மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் பயணித்தனர். பிரதமர் மோடி பயணிக்கும் வாகனம் மீது மலர்களை தூவி தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

கூட்டத்தில் ஜி.கே. வாசன், ஏ.சி.சண்முகம், ஜான் பாண்டியன், பாரி வேந்தர் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் மற்றும்தமிழருவி மணியன் உள்ளிட்டோரும் பங்கேற்றுள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கப்பை கிராமம் அருகே விபத்தில் இறந்த பிரதீஷ், ஹரி பிரதாப் சிறுவர்கள் இருவர் அதேபோன்று திண்டிவனம் பகுதியில் மின் கசிவு விபத்திலிருந்து இறந்த ஒரு சிறுவர் குடும்பத்திற்கு முதலமைச்சரின் நிவாரண நிதியில் தலா 2 லட்சம் ரூபாய் கனா காசோலையை அமைச்சர் செஞ்சி மஸ்தான் குழந்தைகளின் பெற்றோரிடம் வழங்கினார்.m உடன் மாவட்ட ஆட்சியர், டாக்டர் பழனி, ஒன்றிய குழு பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்த்தியார் மஸ்தான், கழக நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# பண்ருட்டியில் இல்லம் தோறும் ஸ்டாலின் குரல்

பண்ருட்டி பிப் 28

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வடக்கு ஒன்றிய ஊராட்சிகளில் இல்லந்தோறும் ஸ்டாலின் குரல் திராவிட மாடல் அரசின் இரண்டரை ஆண்டு சாதனைகள் பற்றி மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி சிறுவத்தூர்,

சிறு கிராமம் நத்தம் மனபுத்தூர், பூக்குணம், வீரப்பார் ஆகிய பகுதிகளில் பண்ருட்டி வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் சந்தோஷ்குமார் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் வீடு வீடாக சென்று துண்டு பிரசவங்களை வழங்கி திமுக அரசின் பல்வேறு சாதனை பற்றி பொதுமக்கள் இடையே எடுத்துரைத்தனர்.





இந்த நிகழ்ச்சியில் சூரக்குப்பம் கிளை செயலாளர்கள் இளையராஜா, கிருஷ்ணமூர்த்தி துணை செயலாளர் ராஜேஷ், கிளைகழகபிரதநிதி வெங்கடேசன் சக்திவேல் மோகன் பாக்கியராஜ் கிளை கழக இளைஞரணி கார்த்திகேயன், மனோ, மற்றும் வைத்தியநாதன் சீனுவாசன், ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# போதைப்பொருள் கடத்தல் வழக்கில் தொடர்புடைய ஜாபர் சாதிக்கை தேடும் போலீசார்

சென்னை, பிப்.28

நாடு முழுவதும் போதைப்பொருள் கடத்தலை தடுக்க மத்திய போதைப்பொருள்தடுப்பு பிரிவு அதிகாரிகளும் அனைத்து மாநில போலீசாரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் மெத்த பெட்டமைன் என்கிற போதைப்பொருளை தயாரிக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருளான சூடோ பெட்ரின் என்கிற போதைப்பொருள் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் மலேசியா போன்ற வெளிநாடுகளுக்கு இந்தியாவில் இருந்து கடத்தப்படுவதாக அந்த நாட்டு போதைப்பொருள்தடுப்பு பிரிவினர் இந்திய அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து டெல்லியில் உள்ள மத்திய போதைப்பொருள்தடுப்பு பிரிவு அதிகாரிகளும், டெல்லி போலீசாரும் விசாரணை நடத்தி ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு உலர் தேங்காய் பொடியில் மறைத்து, தடை செய்யப்பட்ட போதைப்பொருளான சூடோ பெட்ரினை அனுப்பி வைத்ததை கண்டுபிடித்தனர்.

இதையடுத்து மத்திய போதைப்பொருள்தடுப்பு பிரிவு அதிகாரிகளும், டெல்லி போலீசாரும் போதைப்பொருள் கடத்தல் கும்பலை பிடிக்க அதிரடியாக களத்தில் இறங்கினார்கள். அவர்கள் மேற்கு டெல்லியில் உள்ள பசாய் தாராபூர் பகுதியில் உள்ள குடோன்களில் சோதனை நடத்தினர். கடந்த 15ந்தேதி நடந்த இந்த சோதனையில் 50 கிலோ சூடோ பெட்ரின் போதைப்பொருள் சிக்கியது.

இந்த கடத்தலில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்தனர். அவர்கள் 3 பேரும் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் ஆவர். இவர்கள் கடந்த 3 ஆண்டுகளில் 3500 கிலோ அளவில் சூடோ பெட்ரின் போதைப் பொருளை கடத்தி வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்திருப்பதும் தெரிய வந்தது. இதன் சர்வதேச மதிப்பு ரூ.2 ஆயிரம் கோடி ஆகும்.

இந்த போதைப்பொருள் கடத்தலுக்கு தமிழகத்தை சேர்ந்த திரைப்பட தயாரிப்பாளர்ஜாபர்சாதிக் (வயது 36) என்பவர் முக்கிய மூளையாக செயல்பட்டிருப்பதாகவும் போலீசார் தகவல் தெரிவித்துள்ளனர். இவர் ராமநாதபுரம் மாவட்டம் கமுதியை சேர்ந்தவர். சென்னை புரசைவாக்கத்தில் விடுதி நடத்தி வருகிறார். பிரபல அசைவ ஓட்டல் ஒன்றின் புரசைவாக்கம் கிளையையும் நடத்தி வருகிறார். அதன்பிறகு சினிமா தயாரிப்பாளராக மாறிய இவர் மங்கை என்ற திரைப்படத்தையும் தயாரித்து வருகிறார். மேலும் சில திரைப் படங்களையும் தயாரித்து வருகிறார். தயாரிப்பாளர் ஜாபர் சாதிக்குக்கு தமிழ் திரையுலகில் நெருங்கிய நண்பர்கள் பலர் உள்ளனர். அரசியல் களத்திலும் அவர் பிரபலமாக நபராக இருந்து வந்துள்ளார். பல முக்கிய பிரமுகர்களுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. இதன் அடிப்படையிலேயே அவர் பல படங்களைதயாரித்து வந்துள்ளார். கைதான 3 பேரிடம் டெல்லி போலீசார் நடத்திய விசாரணையில், இந்த கடத்தலுக்கு தயாரிப்பாளர் ஜாபர் சாதிக் தான் முக்கிய மூளையாக செயல் பட்டதாக தெரிவித்துள்ளனர். இதைத்தொடர்ந்து டெல்லியில் உள்ள மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசார் இந்த வழக்கில் தயாரிப்பாளர் ஜாபர் சாதிக்கை முக்கிய குற்றவாளியாக சேர்த்துள்ளனர்.



மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு போலீசுக்கு இந்தியா முழுவதும் கிளைகள் உள்ளன. தமிழகத்தை தலைமையிடமாக கொண்டும் மத்திய போதைப்பொருள்தடுப்பு பிரிவு ஒன்று இயங்கி வருகிறது.

தமிழகத்தில் உள்ள இந்த பிரிவானது தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகிய 3 மாநிலங்களில் இருந்துசர்வதேசஅளவில் கடத்தப்படும் போதைப் பொருளை தடுத்து வருகிறார்கள்.

டெல்லியைசேர்ந்த அதிகாரிகள் கொடுத்த தகவலின் பேரில் தமிழகத்தை சேர்ந்த மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு போலீசார், தமிழகம், கர்நாடகா, கேரளா ஆகிய 3 தென் மாநிலங்களில் தயாரிப்பாளர் ஜாபர் சாதிக் பதுங்கி இருக்கிறாரா என்று தேடி வருகிறார்கள்.

மேலும் அவர் சென்னையில் உள்ள நண்பர்கள் வீட்டில் பதுங்கி இருக்கலாமா என்றும் தீவிர தேடுதல் வேட்டையில் இறங்கியுள்ளனர். அவரை கைது செய்ய அதிரடி நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அவரது செல்போன் எண் மூலமாக அவர் யார் யாருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளார் என்றும் துப்பு துலக்குகிறார்கள். மேலும் அவர் நீண்ட நேரமாக யாருடன் பேசியுள்ளார் என்பது பற்றிய தகவல்களையும் திரட்டி வருகிறார்கள். சர்வதேச அழைப்பில் யாரிடமாவது பேசியுள்ளாரா என்பது பற்றியும் ஆய்வு செய்து வருகிறார்கள்.

போதைப்பொருள் கடத்தலில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மேலும் சிலருக்கும் இதில் தொடர்பு இருக்கலாம் என்கிற சந்தேகம் எழுந்துள்ளது.

அதன் அடிப்படையில் விசாரணை நடந்து வருகிறது. இந்த விசாரணை தீவிரம் அடையும் பட்சத்தில் ஜாபர் சாதிக் உள்பட அவரது கூட்டாளிகள் மேலும் பலர் டெல்லி போதைப் பொருள் வழக்கில் கைது செய்யப்படுவார்கள் என்று அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் திரைப்பட தயாரிப்பாளர் ஜாபர் சாதிக்கை டெல்லியில் உள்ள மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகுமாறு மத்திய போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் சம்மன் அனுப்பியுள்ளனர்.

இந்த சம்மன் அவரது வீட்டில் ஒட்டப்பட்டுள்ளது.

# பன்றிகள் தோட்டத்திற்குள் புகுந்து அட்டகாசம்: பயிர்களை பாதுகாக்க விவசாயிகள் கோரிக்கை



நம்பியூர், பிப்.28

ஈரோடு மாவட்டம் நம்பியூர் அருகே உள்ள எலத்தூர் பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி வரதராஜன். இவர் 4 ஏக்கர் விவசாய தோட்டத்தில் மக்காச்சோளம், மஞ்சள், வெற்றிலை, கரும்பு உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டு விவசாயம் செய்து வருகிறார்.

கடந்த சில நாட்களாக தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளம், வெற்றிலை உள்ளிட்ட பயிர்களை பன்றிகள் மிகவும் கடுமையாக சேதப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து விவசாயி வரதராஜன் கூறுகையில் எலத்தூர் மற்றும் சுற்று வட்டார பகுதியில் சிலர் இறைச்சிக்காக பன்றி வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பன்றிகளை பட்டியில் அடைத்து வளர்க்காமல் திறந்த வெளியில் நூற்றுக்கணக்கான பன்றிகளை வளர்ப்பதால் தோட்ட த்து பகுதிகளில் புகுந்து அறுவடைக்கு தயாராக உள்ள மக்காச்சோளம், கரும்பு பயிர்களை சேதம் செய்ததால் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகள் நாங்கள் பல லட்சம் ரூபாய் முதலீடு செய்து பயிர்களை வளர்த்தால் ஒரே நாளில் இந்த பன்றிகள் மிகுந்த சேதத்தை ஏற்படுத்துகிறது. இதுகுறித்து எலத்தூர் பேரூராட்சி மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என வேதனையுடன் கூறினார்.

எனவே இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுத்து பயிர்களுக்கு பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பண்ருட்டி அன்னை வேளாங்கண்ணி பாலிடெக்னிக் கல்லூரியில் கேம்பஸ் இன்டர்வியூ 112 மாணவர்கள் தேர்வு



பண்ருட்டி பிப் 28

பண்ருட்டி அன்னை வேளாங்கண்ணிவ்பாலிடெக்னிக்கல்லூரியில் நடந்த கேம்பஸ் இண்டர்வியூவில்112 க மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

புதுச்சேரி திருவா ண்டார்கோவில் லுகாஸ் டி.வி.எஸ்.,கம்பெனி,நெட்டப்பாக்கம் லுகாஸ் டி.வி.எஸ்.,கம்பெனி,செங்கல்பட்டு மேக்னா ஆட்டோமோடிவ் கம்பெனி ,புதுச்சேரி நெட்டப்பாக்கம் இந்தியா நிப்பான் கம்பெனி ஆகிய நிறுவனத்தை சேர்ந்த மனிதவள மேம்பாட்டு அலுவலர்கள் அருண்குமார், வினோத், ராஜசேகர் ,தாமரைக்கண்ணன் ஆகியோர்கள் கலந்து கொண்டு கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு கேம்பஸ் இண்டர்வியூ நடத்தினர்.

இதில் மெக்கானிக்கல் துறையில் 46 மாணவர்களும், மின்னியல்துறையில் 50 மாணவர்கள்,மின்னணுவியலில் 12 மாணவர்கள்,கம்ப்யூட்டர் துறையில் 2 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பண்ருட்டி கிரேவெல் கம்பெனிக்கு சிவில் மாணவர் ஒருவர் தேர்வு செய்யப்பட்டார்.

கேம்பஸ் இண்டர்வியூவில் தேர்வு செய்யப்பட்ட மாணவர்களை கல்லூரி செயலர் முனைவர் இயேசுதங்கம்,முதல்வர் முனைவர் S.சவரிராஜ்,துணை முதல்வர் G.கிருஷ்ணமூர்த்தி, கல்லூரியின் வேலைவாய்ப்பு அலுவலர் T. ரவிச்சந்திரன், துறைத்தலைவர்கள் அமலோற்பவம்,அவிலாதெரேஸ் ஆகியோர் பாராட்டினர்.

# திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் பெண் தீக்குளிக்க முயற்சி



திருப்பூர், பிப்.28

திருப்பூர்அவினாசி கான்வெண்ட் வீதியை சேர்ந்தவர் சின்னம்மாள். இவர் இன்று திருப்பூர் கலெக்டர் அலுவலகத்திற்கு மனு கொடுக்க வந்தார். கையில் மண்எண்ணெய் கேன் கொண்டு வந்த அவர் திடீரென உடலில் மண்எண்ணெயை ஊற்றி தீக்குளிக்க முயன்றார். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் சின்னம்மாள் தீக்குளிக்கும் முயற்சியை தடுத்து நிறுத்தினர். பின்னர் அவர் கலெக்டரிடம் மனு கொடுத்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

எனது கணவர் நஞ்சப்பனுக்கு 2 மனைவிகள். எனக்குகுழந்தைஇல்லை. எனது கணவர் இறந்துவிட்டார். எனது கணவருக்கு சொந்தமாக வீடும், ரூ.80 லட்சம் பணமும் உள்ளது. அதனை முதல் மனைவி அபகரித்து கொண்டு என்னை வீட்டை விட்டு துரத்திவிட்டார். எனவே வீடு, பணத்தை மீட்டு தர வேண்டும் என்று கூறியிருந்தார்.

# காற்றாலை நிறுவனத்தை கண்டித்து விவசாயிகள் போராட்டம்



ஒட்டன்சத்திரம், பிப்.28

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே அப்பியம்பட்டி கிராமத்தில் தனியார் நிறுவனம் காற்றாலைகள் மூலம் பெறப்படும் மின்சாரத்தை மின்பாதை மூலம் தனியார் துணை மின் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல பாதை அமைத்தனர். விவசாயிகளின் அனுமதியின்றி விவசாய நிலங்களை பாதிக்கும் வகையிலும், அரசு புறம்போக்கு நிலத்திலும், நீர், நிலை ஓடை பகுதிகளிலும் மின் கம்பங்கள் அமைத்து மாவட்ட நிர்வாகத்திடம் முறையான அனுமதி பெறாமல் சட்டத்திற்குபுறம்பாகமின்பாதையினை அமைத்து வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டினர்.

மேலும் மின்பாதை அமைக்கும் போது விவசாய நிலத்தில் உள்ள ஆயிரக்கணக்கான தென்னை மரங்களை வெட்டி அழித்தும், குடிநீர் குழாய்களை உடைத்தும் அதிகளவில் சேதப்படுத்தியுள்ளனர். இவர்கள் இப்பகுதியில் தொடர்ச்சியாக காற்றாலை மின்பாதையினை அமைப்பதால் பாதைகள் தடைபட்டு விவசாய நிலங்களுக்கு விளைபொருட்களை வாகனங்களில் கொண்டு செல்ல முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

தனியார்காற்றாலை நிறுவனம் அமைக்கும் மின்பாதையினை மாற்றி அமைத்து விவசாயத்தை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென 4வது நாளாக விவசாயிகள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் மின்பாதை அமைக்கும் பணியை மாவட்ட நிர்வாகம் உடனடியாக நிறுத்தவில்லை என்றால் வருகின்ற பாராளுமன்ற தேர்தலை அப்பியம்பட்டி கிராம விவசாயிகள் புறக்கணிப்பதாக தெரிவித்தனர்.

# திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் ஒப்பந்த பணியாளர்கள் உள்ளிருப்பு போராட்டம்



திருப்பூர், பிப்.29

திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் வளாகத்தில் தூய்மை பணி மற்றும் காவல் பணி மேற்கொள்ளும் ஊழியர்கள் பலர் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்து வருகிறார்கள்.

இந்த நிலையில் மாவட்ட நிர்வாகம் அறிவித்த தினக்கூலி 725 ரூபாயை வழங்கிட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி ஒப்பந்த பணியாளர்கள் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து தகவல் அறிந்ததும் மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் திருப்பூர் தெற்கு போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகிறார்கள். ஒப்பந்த பணியாளர்களின் போராட்டம் காரணமாக அரசு மருத்துவமனையில் சுகாதார பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது.

# புதுப்பொலிவு பெறும் திருவள்ளூர் ரெயில் நிலையம்




திருவள்ளூர், பிப்.28

திருவள்ளூர் முக்கிய ரெயில் நிலையமாக உள்ளது.

சென்னையில் இருந்து அரக்கோணம், திருத்தணிக்கு செல்லும் புறநகர் மின்சார ரெயில்கள் மற்றும் காட்பாடி, திருப்பதி, மும்பை, பெங்களூர் விரைவு ரெயில்கள் என தினந்தோறும் சுமார் 200க்கும் மேற்பட்ட ரெயில்கள் திருவள்ளூர் ரெயில் நிலையத்தில் நின்று செல்கின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் முக்கிய நகரமாக உள்ள திருவள்ளூரில் சிறப்பு பெற்ற வீரராகவப் பெருமாள் கோவில், விஸ்வருப பஞ்சமுக ஆஞ்சநேயர் கோவில், கலெக்டர் அலுவலகம், போலீஸ் சூப்பிரண்டு அலுவலகம் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களும் உள்ளன. இதனால் பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் மாணவ மாணவிகள், அரசு அலுவலர்கள், வியாபாரிகள், வேலைக்குச் செல்லும் பெண்கள், ஆண்கள் என ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் திருவள்ளூர் ரெயில் நிலையத்திற்கு வந்து செல்கின்றனர்.

இந்தநிலையில் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தின் கீழ் தெற்கு ரெயில்வேயின் சென்னை கோட்டத்தில் உள்ள ரெயில் நிலையங்களை மறுவடிவமைப்பு செய்து அதிநவீன ரெயில் நிலையங்களாக மாற்ற தெற்கு ரெயில்வே திட்டமிட்டு உள்ளது.

இதில்முதல் கட்டமாக 15 ரெயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் ரெயில் நிலையங்களின் உள்கட்டமைப்பு நவீன படுத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் சென்னை சென்ட்ரல்–அரக்கோணம் கோட்டத்தில் திருவள்ளூர் ரெயில் நிலையம் ரூ.28.82 கோடியில் மறு சீரமைப்பு பணி கடந்த ஆண்டு தொடங்கப்பட்டது.

இதில் புதிய ரெயில் நிலையக் கட்டிடம், நடைமேடைகளின் தரை மற்றும் கூரை சீரமைப்பு, ரெயில் நிலையம் அருகே இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடங்கள் சீரமைக்கப்படும் பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

பணிகள் அனைத்தையும் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் முடிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. ரெயில் நிலையத்தில் நகரும் படிக்கட்டு மற்றும் லிப்ட் வசதி, 12 மீட்டர் அகலம்கொண்ட பயணிகள் நடைமேம்பாலம் வருகிறது. மேலும் நடைமேடைகளிலும் பயணிகள் நடமாடும் இடங்களிலும் பயனுள்ள தகவல் அளிக்க திரைகள், கண்காணிப்பு கேமரா அமைப்பது என பல்வேறு நடவடிக்கைகளை ரெயில்வே நிர்வாகம் மேற்கொள்ள உள்ளது.

இதற்கிடையே சீரமைப்பு பணிகாரணமாக ரெயில் நிலைய முகப்பு வழியாக பயணிகளை அனுமதிக்க வில்லை. சுரங்கப்பாதை வழியாக சென்று வருகிறார்கள். மேலும் பயணச் சீட்டு வழங்கும் இடம் நடைமேடை 1ல் உள்ளது. அங்கும் பணிகள் நடைபெற்று வருவதால் பயண சீட்டை வாங்க பயணிகள் கடும் அவதி அடைந்து வருகின்றனர்.

எனவே ரெயில்நிலைய சீரமைப்பு பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என்று பயணிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

# வடசென்னை மக்களை மிரட்டும் தெரு நாய்கள்



ராயபுரம், பிப்.28

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தெரு நாய்களின் தொல்லை சமீபகாலமாகஅதிகரித்துஉள்ளது. நாய்களை பிடித்து மாநகராட்சி ஊழியர்கள் அவற்றிற்கு தடுப்பூசி மற்றும் கருத்தடை செய்தாலும் அதன் எண்ணிக்கை குறையவில்லை. அனைத்து தெருக்களிலும் கூட்டம், கூட்டமாக நாய்கள் சுற்றி வருகின்றன.

குறிப்பாக ராயபுரம், கொடுங்கையூர், பெரம்பூர், வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட வட சென்னை பகுதிகளில் தெரு நாய்கள் பொதுமக்களை மிரட்டி வருகின்றன. இரவு 7 மணிக்கு மேல் சாலை மற்றும் தெருக்களில் நடந்து செல்பவர்களையும், வாகனங்களில் செல்பவர்களையும் விரட்டி, விரட்டி கடிக்க பாய்கின்றன.

கொடுங்கையூர் குப்பை கிடங்கு தெருநாய்களுக்கு உணவு அளிக்கும் கூடாரமாக உள்ளது. இதனால் குப்பை கிடங்கை சுற்றி உள்ள இடங்களில் நாய்களின் எண்ணிக்கை பலமடங்குஅதிகரித்துஉள்ளன. கொடுங்கையூர், எழில் நகர், ஆர்.ஆர் நகர், கிருஷ்ணமூர்த்தி நகர், புளியந்தோப்பு, பெரம்பூர், ஜமாலியா நகர், ஹைதர்கார்டன், எஸ்.பி.ஐ. ஆபிசர் காலனி மற்றும் பட்டாளம் பகுதிகளில் நாய்கள் அட்டகாசம் தாங்க முடியாத அளவுக்கு காணப்படுகிறது. இரவு நேரத்தில் செல்பவர்களை குறைந்தது 6 நாய்களுக்கு மேல் கூட்டமாக துரத்துகின்றன. இதனால் இரவு நேரத்தில் வெளியே செல்லவும், பணிமுடிந்து வீட்டிற்கு வரவும் பொது மக்கள் அச்சம் அடையும் நிலை உள்ளது.

இதேபோல் சூளை, டி.கே.முதலி தெரு உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் மோட்டார் சைக்கிளில் செல்பவர்களை 10 முதல் 20 நாய்கள் வரை படையெடுத்து வந்து மிரட்டுகின்றன.

சமீபத்தில் நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் ராயபுரம் மண்டலத்தில் 90 சதவீதம் தெரு நாய்கள் எண்ணிக்கை அதிகரித்து இருப்பது தெரிந்தது. வழக்கமாக 4 ஆண்டுக்கு ஒரு முறை தெருநாய்கள் குறித்து கணக்கெடுப்பு நடத்தவேண்டும். ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் பல்வேறு காரணங்களால் இந்த கணக்கெடுப்பு கடந்த 2022ம் ஆண்டுக்கு பின்னர் நடத்தப்படவில்லை. ஆனால் ராயபுரம் மண்டலத்தில் மட்டும் கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. 2018ம் ஆண்டு 2100ஆக இருந்த தெரு நாய்களின் எண்ணிக்கை 2023ம் அண்டு 3900 ஆக உயர்ந்து உள்ளது.

இதைத்தொடர்ந்து ராயபுரம் மண்டலத்தில் உள்ள தெரு நாய்களை பிடிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

இதுகுறித்து தண்டையார்பேட்டையை சேர்ந்த சமூக ஆர்வலர் தேவராஜ் கூறும்போது, மாநகராட்சியில் தற்போது 80 நாய் பிடிப்பவர்களும், 15 கால்நடை டாக்டர்களும் உள்ளனர். மண்டலம் வாரியாக கணக்கெடுப்பு நடத்தி ஆய்வு செய்து உறுதியான தெருநாய்களின் எண்ணிக்கை பற்றி தெரியாமல் எந்த முடிவுகளையும் எடுக்க முடியாது.

எனவே தெருநாய்கள் பற்றி விரைவில கணக்கெடுப்பு நடத்த வேண்டும். ராயபுரத்தில் மட்டும் தெரு நாய்கள் கணக்கெடுப்பு நடந்து உள்ளது. ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக இந்த கணக்கெடுப்பு மற்ற மண்டலங்களில் நடைபெறவில்லை. கொடுங்கையூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அங்குள்ள குப்பைக் கிடங்கு தெரு விலங்குகளுக்கு உணவளிக்கும் இடமாக மாறி உள்ளது. மாலை மற்றும் இரவு நேரங்களில் தெருக்களில் நடமாடவே அச்சமாக உள்ளது. பெரும்பாலான நாய்கள் தெரு ஓரங்களில் தேங்கி கிடக்கும் கழிவுகளில் உணவு தேடுகின்றன. நாய்களை கட்டுப்படுத்த உறுதியான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்றார்.

இது தொடர்பாக மாநகராட்சி வடக்கு மண்டல அதிகாரி ஒருவர் கூறும் போது, கடந்த ஜனவரி 1ந் தேதி முதல் பிப்ரவரி 20ந் தேதி வரை தெருநாய்கள் தொடர்பாக 5 மண்டலங்களில் மொத்தம் 784 புகார்கள் வந்துள்ளன.

924 நாய்கள் பிடிக்கப்பட்டு ரேபிஸ் தடுப்பூசி மற்றும் கருத்தடை செய்யப்பட்டு உள்ளன. புயல் மற்றும் அதைத் தொடர்ந்து நிவாரணப் பணிகள் காரணமாக தெரு நாய்கள் பற்றிய கணக்கெடுப்பு தாமதமானது. விரைவில் தெருநாய்கள் பற்றிய கணக்கெடுப்பு நடைபெறும். பொதுமக்கள் தங்கள் புகார்களை 1913 என்ற எண்ணில் தெரிவிக்கலாம். புகார்கள் மீது இரண்டு நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்றார்.

# மீஞ்சூர் அருகே அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. விபத்தில் பலி



பொன்னேரி, பிப்.28

பொன்னேரி அடுத்த வேண்பாக்கத்தில் வசித்து வந்தவர் ரவிக்குமார் (63). அ.தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. இவரது மனைவி நிர்மலா. இவர்களது ஒரே மகள் சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் மருத்துவம் படித்து வருகிறார்.

இன்று காலை கணவன் மனைவி இருவரும் சென்னையில் உள்ள மருத்துவ கல்லூரில் மகளை விட்டு விட்டு காரில் திரும்பி வந்து கொண்டு இருந்தனர். காரை ரவிக்குமார் ஓட்டினார்.

மீஞ்சூர் வண்டலூர் வெளிவட்ட சாலையில் மீஞ்சூரை அடுத்த சீமாபுரம் சுங்கச்சாவடி அருகே வந்துகொண்டு இருந்த போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையோரம் நின்று கொண்டு இருந்த லாரி மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் ரவிக்குமாரும், நிர்மலாவும் பலத்த காயம் அடைந்தனர். உடனடியாக அவர்களை மீட்டு மீஞ்சூர் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

பரிசோதித்த டாக்டர்கள் முன்னாள் எம்.எல்.ஏ.ரவிக்குமார் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். நிர்மலா மேல் சிகிச்சைக்காக சென்னை ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். அவருக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

பலியான ரவிக்குமார் 199196ம் ஆண்டில் பொன்னேரி தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்தார். இவரது மனைவி நிர்மலாவும் அதே ஆண்டில் திண்டுக்கல் தொகுதியில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாக இருந்து உள்ளார். ரவிக்குமாரின் சொந்த ஊர் மணலி புதுநகர்அடுத்த நா.பாளையம் ஆகும். அவர் நெஞ்சுவலிக்காக தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்து உள்ளார். ரவிக்குமார் கடைசியாக கடந்த 2 நாட்களுக்கு முன்பு தடப்பெரும்பாக்கத்தில் நடைபெற்ற ஜெயலலிதா பிறந்தநாள் விழாவில் பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023

# காளிதாஸ் ஜெயராமுடன் மீண்டும் நடிக்கனுமானு யோசிக்கனும் அர்ஜீன் தாஸ்




சைத்தான், டேவிட், வாஷிர், ஷோலோ படங்களை இயக்கிய பிஜோய் நம்பியார் இயக்கத்தில் அர்ஜூன் தாஸ், காளிதாஸ் ஜெயராம் நடித்திருக்கும் புதிய படம் "போர்". டி.ஜே. பானு, சஞ்சனா நடராஜன், மெர்வின் ரொசாரியோ மற்றும் பல முன்னணி நட்சத்திரங்கள் இந்த படத்தில் நடித்துள்ளனர்.

இந்த படம் தமிழ் மற்றும் இந்தி என இரண்டு மொழிகளில் மார்ச் 1ம் தேதி வெளியாக இருக்கிறது. இந்த படத்தை டி சீரிஸ் மற்றும் ரூக்ஸ் மீடியா இணைந்து தயாரித்துள்ளன. இப்படம் தொடர்பான விழா சமீபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அர்ஜூன் தாஸ் பேசும் போது, "போர் திரைப்படம் ஒரு கல்லூரி கால வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட திரைப்படம். கொண்டாட்டத்திற்கான திரைப்படம், நட்பும் படத்தில் சிறிய அளவில் இருக்கிறது. வேறு வேறு விதத்திலான உணர்வுகள் படத்தில் கொட்டிக்கிடக்கிறது."

"இந்த வாய்ப்பை எனக்குக் கொடுத்த தயாரிப்பாளருக்கு நன்றி. காளிதாஸ் ஜெயராமுடன் மீண்டும் நடிக்க வேண்டும் என்றால் கொஞ்சம் யோசிக்க வேண்டும். ஏனென்றால் படப்பிடிப்பு தளத்தில் டேக் செல்வதற்கு முன்பு வரை சிரிக்க வைத்துக் கொண்டே இருப்பான். ரொம்பவே சேட்டை செய்வான். மற்றபடி மிகச்சிறந்த நண்பன். காளிதாஸ் உடன் சேர்ந்து நடித்த அனுபவம் மகிழ்ச்சியானது' என்று தெரிவித்தார்.

# 'சட்டவிரோதச் செயல்களில் எவர் ஈடுபட்டிருந்தாலும்': ஜாபர் சாதிக் குறித்து அமீர் விளக்கம்



"செய்திகளில் வரும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமேயானால், அது கண்டிக்கப்பட வேண்டியதும், தண்டிக்கப்பட வேண்டியதுமே. சட்டவிரோதச் செயல்களில் எவர் ஈடுபட்டிருந்தாலும், அவர்களுடன் நான் தொடர்ந்து பணியாற்றப் போவதில்லை" என்று தயாரிப்பாளர் ஜாபர் சாதிக்கின் போதைப்பொருள் கடத்தல் விவகாரம் குறித்து இயக்குநர் அமீர் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், "கடந்த இரண்டு நாட்களாக, எனது 'இறைவன் மிகப் பெரியவன்' திரைப்படத்தின் தயாரிப்பாளர் ஜாபர் சாதிக் குறித்து வரும் செய்திகள் அனைத்தும் எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது. கடந்த 22ம் தேதி நான் 'இறைவன் மிகப் பெரியவன்' திரைப்படத்தின் இறுதிக்கட்ட படப்பிடிப்பில் இருந்த போது, திடீரென படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. ஏன் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது? என்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை ஊடகங்கள் வாயிலாகவே நான் அறிந்து கொண்டேன். உண்மை எதுவென்று இப்போது வரை எனக்குத் தெரியவில்லை. எதுவாயினும், செய்திகளில் வரும் குற்றச்சாட்டுகளில் உண்மை இருக்குமேயானால், அது கண்டிக்கப்பட வேண்டியதும், தண்டிக்கப்பட வேண்டியதுமே. நடிகர்களோடும், தயாரிப்பாளர்களோடும் சமரசங்களுக்கு உட்பட்டால் நிறைய பணம் சம்பாதிக்கலாம் என்ற கொள்கைக்கு நான் எப்போதும் எதிரானவன் என்பதை ஊடகத் துறையினர் நன்கு அறிவர். அந்த வகையில், சட்டவிரோதச் செயல்களில் எவர் ஈடுபட்டிருந்தாலும், அவர்களுடன் நான் தொடர்ந்து பணியாற்றப் போவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதும், நான் பத்திரிகையாளர்களை வழக்கமாகச் சந்திக்கும் எனது அலுவலகத்தில் திரைப்பட பணிகளில் ஈடுபட்டிருக்கிறேன். முழு விபரங்கள் தெரிந்த பிறகு, விரைவில் பத்திரிகை மற்றும் ஊடக துறையினரைச் சந்திக்கின்றேன்" என தெரிவித்துள்ளார். மேலும் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜாபர், கயல் ஆனந்தி நடிப்பில் உருவாகியுள்ள 'மங்கை' படத்தின் தயாரிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது. டெல்லியில், சுமார் 2,000 கோடி மதிப்புள்ள போதைப் பொருள்களைக் கடத்த முயன்ற கும்பல், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளது. விசாரணையில், இவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்றும், இந்தக் கும்பலின் தலைவனாகச் செயல்பட்டவர், திமுகவின் சென்னை மேற்கு மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளராக இருந்த ஜாபர் சாதிக் என்பதும் தெரிய வந்தது. இதையடுத்து ஜாபர் சாதிக் திமுகவிலிருந்து நீக்கப்பட்டார்மே லும் குற்றம்சாட்டப்பட்டுள்ள ஜாபர்சாதிக், கயல் ஆனந்தி நடிப்பில் உருவாகியுள்ள 'மங்கை' படத்தின் தயாரிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அனிமேஷன் கதாபாத்திரங்களுடன் கலகலப்பான கதை: வைரலாகும் டபுள் டக்கர் டீசர்



90ஸ் மற்றும் 2000வது காலகட்டங்களில் வெளியான ஜெய்ஹிந்த், கில்லி, தூள், ரன், சந்திரமுகி, அன்பே சிவம், இயற்கை, சுள்ளான், வில்லன் போன்ற பல முன்னணி நடிகர்களின் படங்களுக்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார்.

படங்களின் வெற்றி தோல்வியை கடந்து இவர் இசையமைத்த படங்களின் பாடல்கள் அனைத்தும் நிச்சயம் ஹிட் அடிக்கும். இந்த நிலையில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு தமிழ் திரைப்படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். மகதி இயக்கத்தில் தீரஜ், ஸ்மிருதி வெங்கட் முதன்மை வேடங்களில் நடித்துள்ள புதிய படம் 'டபுள் டக்கர்.' இந்த படத்திற்கு வித்யாசாகர் இசையமைத்துள்ளார். இந்த படத்தில் எம்.எஸ். பாஸ்கர், கோவை சரளா, யாஷிகா ஆனந்த், காளி வெங்கட், முனிஷ் காந்த் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்தியாவில் முதல் முறையாக அனிமேஷன் கதாபாத்திரங்கள் கொண்ட படமாக இப்படம் உருவாகியுள்ளது. இப்படத்தில் ரஜினிகாந்த் உள்ளிட்ட சில அனிமேஷன் கதாபாத்திரங்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. கடந்த சில நாட்களுக்கு முன்பு வெளியான இந்த படத்தின் டீசர் யூடியூபில் லட்சக்கணக்கான பார்வையாளர்களை கடந்துள்ளது.

# ராயன் படத்தில் இணைந்த முக்கிய பிரபலங்கள்.. அடுத்தது யார் தெரியுமா?

தனுஷ் நடிக்கும் தனது 50வது படத்தை அவரே இயக்குகிறார். இந்த படத்திற்கு ராயன் என பெயரிடப்பட்டுள்ளது.

சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு, இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். காளிதாஸ் மற்றும் சந்தீப் கிஷன் உள்ளிட்டோர் இணைந்து நடிப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையே, ராயன் படத்தில் நடிக்கும் முக்கிய கதாபாத்திரங்களை படக்குழு வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில், ராயன் படத்தில் எஸ்.ஜே.சூர்யா, செல்வராகவன், பிரகாஷ் ராஜ், துஷாரா விஜயன், அபர்ணா பாலமுரளி உள்ளிட்டோர் நடிப்பதாக படக்குழு போஸ்டருடன் அறிவித்து வெளியிட்டது.

இந்நிலையில், இவர்களை தொடர்ந்து ராயன் படத்தில் நடிகை வரலட்சுமி நடிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், வரலட்சுமியின் போஸ்டரை பட நிறுவனம் வெளியிட்டுள்ளது.




# 'அந்தகன்' பட அப்டேட் கொடுத்த நடிகர் பிரசாந்த்

"பெரும் பொருட்செலவில் 'அந்தகன்' படம் பண்ணியிருக்கோம். கூடிய விரைவில் தியேட்டரில் ரிலீஸ் ஆகும்" என்று நடிகர் பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை பகுதியில் ஹெல்மெட் விழிப்புணர்வு பிரசாரத்தில் கலந்து கொண்ட நடிகர் பிரசாந்த் பொதுமக்களுக்கு இலவச ஹெல்மெட் வழங்கினார்.

அதன்பின் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், "இன்னைக்கு ஜாலியாக நெல்லை பார்க்க வந்தேன், வந்த இடத்தில் வேலை செய்துவிட்டு மீண்டும் கிளம்புகிறேன். ஹெல்மெட் ஒரு லைஃப் ஜாக்கெட் என்கிறார்கள். இது லைஃப் ஜாக்கெட் மட்டுமல்ல, குடும்ப கோட். சாலை விபத்துகளால் பலர் உயிரிழக்கின்றனர். ஹெல்மெட் இல்லாததால் பலி எண்ணிக்கை அதிகரிக்கிறது.

அதனால்தான் இந்த ஹெல்மெட் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த எனது ஆதரவாளர்கள் சார்பாக நிறைய வேலைகளைச் செய்துள்ளோம். விரைவில் வெளியிடப்படும். இப்போது விஜய் சாருடன் G.O.A.T படத்தில் நடிக்கிறேன். இரண்டு மூன்று புதிய அழைப்புகள் வந்தன. விரைவில், நானும் இந்த பகுதியில் ஏதாவது செய்வேன். G.O.A.T படம் சூப்பராக போய்க் கொண்டிருக்கிறது. தியேட்டர் வந்து ஜாலியாக எஞ்சாய் பண்ணுங்க எல்லோரும் என்று கூறினார்.

கட்சி தொடங்கியுள்ள, விஜய்க்கு என் வாழ்த்துகள். அவரை என் சகோதரர் என்றே சொல்லலாம். மக்களுக்கு சேவை செய்யும் பணி என்பதற்கு ஹார்ட் வொர்க் உட்பட பல கமிட்மெண்ட் இருக்க வேண்டும். விஜய் சாரிடம் அது அதிகம் உள்ளது. எனக்கெல்லாம் அது ரொம்ப கஷ்டம், அதற்கு தைரியம் வேண்டும்.நான் நடிகனா நடித்துக் கொண்டிருக்கிறேன். நடிகன் மட்டுமே இப்போதும். என்னால் மக்களுக்கு என் மூலமாக என்ன செய்ய முடியுமோ அதை செய்து கொண்டிருக்கிறேன். மக்கள் என் மீது வைத்துள்ள அன்புக்கு நான் அவர்களுக்கு கைமாறாக இதுபோன்ற பணிகளை செய்கிறேன். அரசியல் நோக்கம் எதுவுல்லை ஏன்னு தெரிவித்துள்ளார்.

# ஹனுமா விஹாரி விவகாரம்.. குற்றச்சாட்டை மறுத்த வீரர் உண்மையை உடைத்த வைரல் கடிதம்



ரஞ்சி கோப்பையின் காலிறுதி போட்டியில் ஆந்திர பிரதேசம் அணி மத்திய பிரதேசம் அணியுடன் மோதி தோல்வியை தழுவி அரையிறுதி வாய்ப்பை இழந்தது. இதைத் தொடர்ந்து ரஞ்சி கோப்பை தொடரில் இனி எப்போதும் ஆந்திர பிரதேசம் அணிக்காக விளையாட மாட்டேன் என்று அந்த அணியை சேர்ந்த ஹனுமா விஹாரி தெரிவித்துள்ளார்.

அரசியல் காரணங்களுக்காகவே தான் அணியில் இருந்து விலகியதாக ஹனுமா விஹாரி தெரிவித்து இருந்தார். ஹனுமா விஹாரி குற்றச்சாட்டை முழுமையாக மறுத்த, ஆந்திரா அணியின் விக்கெட் கீப்பர், பேட்டர் கே.ன். ப்ருத்விராஜ், தனது சமூக வலைதளத்தில் தன் தரப்பு விளக்கத்தையும் பதிவிட்டிருந்தார். அதில், "நீங்கள் கமென்ட்களில் தேடிக்கொண்டிருக்கும் நபர் நான் தான். ஆனால் நீங்கள் கேள்வியுற்ற தகவல் முற்றிலும் பொய்யான ஒன்று. போட்டி மற்றும் ஒருவரின் சுய மரியாதையை விட பெரியது எதுவும் கிடையாது. தனிநபர் தாக்குதல் மற்றும் ஆபாச மொழியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. அணியில் உள்ள அனைவருக்கும், அன்று என்ன நடந்தது என நன்றாகவே தெரியும். இந்த அனுதாப விளையாட்டை எப்படி வேண்டுமானாலும் விளையாடி கொள்," என்று குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக ஹனுமா விஹாரி வெளியிட்டுள்ள பதிவில், "ஒட்டுமொத்த அணிக்கும் தெரியும்" என்ற தலைப்பில் கடிதம் ஒன்றின் புகைப்படத்தை இணைத்துள்ளார்.

அந்த கடிதத்தில், "ரஞ்சி கோப்பையில் அணியை சேர்ந்த வீரர் நான் தவறான மொழியை பயன்படுத்தியதாகவும், அவரை மோசமாக நடத்தியதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். ஆனால் உண்மை என்னவென்றால், நான் பயன்படுத்திய வார்த்தைகள் நம் அணிக்குள் வழக்கமாக பயன்படுத்தும் வார்த்தை தான். அணியின் டிரெசிங் அறையில் இந்த வார்த்தைகள் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது." "ஆனாலும், ஒருவர் இதனை தனிப்பட்ட முறையில் எடுத்துக் கொண்டுள்ளார். நாம் அனைவரும் ஒரே அணியை சேர்ந்தவர்கள், சமயங்களில் அணியில் உள்ள உதவியாளர் குழுவும் இது போன்ற சூழலை எதிர்கொண்ட சம்பவங்கள் உள்ளன. அந்த வகையில், விஹாரியே எங்களது அணியின் கேப்டனாக செயல்பட வேண்டும் என்று விரும்புகிறோம். எங்களுக்கு அவரிடம் எந்த பிரச்சினையும் இருந்ததில்லை. அவர் எப்போதும் எங்களிடம் இருக்கும் திறமையை சிறப்பாக வெளிக்கொண்டு வந்துள்ளார்." "அவரது தலைமையில் நாங்கள் ஏழு முறைக்கும் அதிகாக தகுதி சுற்றுக்கு முன்னேறி இருக்கிறோம். இந்த ரஞ்சி தொடர், வீரர்களாக எங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆந்திரா ரஞ்சி வீரர்களாக எங்களுக்கு விஹாரி அணியில் இடம்பெற வேண்டும் என்று விரும்புகிறோம்," என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. மேலும் அதில் அணி வீரர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

# இளம் வீரர்களுடன் இங்கிலாந்தை வீழ்த்தியது மகிழ்ச்சி ரோகித் சர்மா

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வரும் இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் இந்தியாஇங்கிலாந்து இடையிலான 4வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடைபெற்றது.

இதில் இந்திய அணி 5 விக்கெட்டை இழந்து 192 ரன்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் இந்த தொடர் உண்மையிலேயே ஒரு கடினமான தொடராக அமைந்தது என இந்திய அணியின் கேப்டன் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது:

முதல் நான்கு போட்டிகளின் முடிவில் நாங்கள் இந்த தொடரை கைப்பற்றி இருப்பது உண்மையிலேயே பெருமையாக இருக்கிறது. எங்களது அணியின் ட்ரெஸ்ஸிங் ரூமில் உள்ள அனைவருமே திறமையான வீரர்கள். இந்த தொடரில் சில சவால்களை நாங்கள் ஒவ்வொரு போட்டியிலுமே எதிர்கொண்டோம்.

இருப்பினும் தற்போது கிடைத்துள்ள முடிவுகளின் அடிப்படையில் நாங்கள் செயல்பட்ட விதம் திருப்தி அளிக்கிறது. முன்னணி வீரர்கள் அணியில் இல்லாமல் இளம் வீரர்களுடன் இப்படி ஒரு செயல்பாட்டை வெளிப்படுத்தியதில் மகிழ்ச்சி. டொமஸ்டிக் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்ட அவர்கள் தற்போது சர்வதேச கிரிக்கெட்டிலும் மிகப்பெரிய சவால்களுக்கு இடையே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அசத்தி உள்ளனர்.

எனக்கும் டிராவிட் பாய்க்கும் இளம் வீரர்களுக்கு சரியான சூழலை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது மட்டும்தான் எண்ணமாக இருந்தது. அந்த வகையில் இந்த தொடரில் இளம்வீரர்கள் அனைவருமே சிறப்பாக செயல்பட்டதாக நினைக்கிறேன். துருவ் ஜுரேல் முதல் இன்னிங்சில் விளையாடிய விதம் அவரது முதிர்ச்சியான செயல்பாட்டை வெளிக்காட்டியிருந்தது. அவரிடம் தெளிவான நல்ல ஷாட்டுகள் இருக்கின்றன. முதல் இன்னிங்சில் அவர் அடித்த 90 ரன்களே எங்களை இங்கிலாந்து அணியின் ஸ்கோருக்கு அருகில் அழைத்துச் சென்றது. அதே போன்று இரண்டாவது இன்னிங்சிலும் அவர் சுப்மன் கில்லுடன் அமைத்த பாட்னர்ஷிப் மிகச் சிறப்பாக இருந்தது. இவ்வாறு அவர் கூறினார்.

# ராஞ்சி டெஸ்டில் வெற்றி: டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலில் 2வது இடத்தை தக்கவைத்த இந்தியா



இந்தியா, இங்கிலாந்து இடையிலான 4வது டெஸ்ட் போட்டி ராஞ்சியில் நடைபெற்றது. இதில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா 31 என தொடரை கைப்பற்றியது.

இந்நிலையில், ராஞ்சி டெஸ்டில் பெற்ற இந்தியாவின் வெற்றிக்கு பிறகு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டது.


அதில், 2வது இடத்தில் இருந்த இந்திய அணி தற்போது 64.58 சதவீதம் பெற்று அதே இடத்தில் நீடித்து வருகிறது. முதல் இடத்தில் நியூசிலாந்து உள்ளது. 3வது இடத்தில் ஆஸ்திரேலியாவும், 4வது இடத்தில் வங்காளதேசமும் உள்ளது.

5 முதல் 9 இடங்களில் முறையே பாகிஸ்தான், வெஸ்ட் இண்டீஸ், தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, இலங்கை உள்ளிட்ட அணிகள் உள்ளன.

# ஷபாலி வர்மா, மேக் லேனிங் அதிரடி: 9 விக்கெட் வித்தியாசத்தில் டெல்லி அணி அபார வெற்றி



மகளிர் பிரீமியர் லீக் டி20 கிரிக்கெட் தொடர் பெங்களூருவில் நடந்துவருகிறது. இதில் மும்பை, டெல்லி, பெங்களூரு, குஜராத், உ.பி. வாரியர்ஸ் உள்ளிட்ட 5 அணிகள் பங்கேற்றுள்ளன. இந்நிலையில், நேற்று நடந்த லீக் ஆட்டத்தில் உ.பி. வாரியர்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற டெல்லி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் ஆடிய உ.பி. வாரியர்ஸ் அணி 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 119 ரன்கள் மட்டுமே எடுத்தது. ஸ்வேதா ஷிவ்ராட் 45 ரன்கள் எடுத்தார். இதையடுத்து, 120 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டெல்லி அணி 14.3 ஓவரில் 1 விக்கெட்டுக்கு 123 ரன்கள் எடுத்து, அபார வெற்றிபெற்றது. ஷிபாலி வர்மா 64 ரன்னும், மேக் லேனிங் 51 ரன்னும் குவித்தனர். சிறப்பாக பந்துவீசிய டெல்லி அணியின் மேரிஜான் காப் ஆட்ட நாயகி விருது பெற்றார்.



**இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன்**

**விளக்கம்:**
விருந்தோம்புதலாகிய வேள்வியின் பயன் இவ்வளவு என்று அளவு படுத்தி கூறத்தக்கது அன்று, விருந்தினரின் தகுதிக்கு ஏற்ற அளவினதாகும்

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.